

# ஒரு வைரஸ் அனைவரையும் பராமரிக்க கற்றுக்கொடுக்கிறது

*கோவிட்-19 தொற்றுநோய்களின் போது ஏற்படும் களங்கம் மற்றும் பாகுபாடு பற்றி ராஜாவும் கவிதாவும் கற்றுக்கொள்கிறார்கள்*

new concept
Centre for Development Communication

unicef
for every child



# ஒரு வைரஸ்
## அனைவரையும் பராமறிக்க கற்றுக்கொடுக்கிறது



*கோவிட்-19 தொற்றுநோய்களின் போது ஏற்படும் களங்கம் மற்றும் பாகுபாடு பற்றி ராஜாவும் கவிதாவும் கற்றுக்கொள்கிறார்கள்*



*யுனிசெ.ஃப் உடன் இணைந்து நியூ கான்செப்ட் சென்டர் ஃபார் டெவெலப்மெண்ட் அண்ட் கம்யூனிகேஷன் உருவாக்கி வடிவமைத்த “ஒரு வைரஸ் அனைவருக்கும் அக்கறை கற்பிக்கிறது”.*

*இந்த வெளியீடு கிரியேட்டிவ் காமன்ஸ் அட்ரிபியூஷன்- வணிகமற்ற-ஷேர்அலைக் 4.0 சர்வதேச உரிமத்தின் கீழ் வெளியிடப்பட்டது* (CC BY-NC-SA 4.0; https: //creativecommons.org/licenses/by-nc-sa/4.0/). *இந்த உரிமத்தின் விதிமுறைகளின் கீழ், சரியான முறையில் மேற்கோள் காட்டப்பட்டு, வணிகமற்ற நோக்கங்களுக்காக நீங்கள் இதை மீண்டும் உருவாக்கலாம், மொழிமாற்றம் செய்யலாம் மற்றும் மாற்றியமைக்கலாம்.*



ராஜாவும் கவிதாவும் மிகவும் நல்ல நண்பர்கள். அவர்கள் இருவரும் வேளச்சேரியில் உள்ள வ.உ.சி. நகரில் வசிப்பவர்கள். அவர்கள் இருவரும் ஒரே பள்ளியில் தான் படிக்கிறார்கள். ராஜாவின் வீட்டுக்கு அருகில் தான் கவிதாவின் வீடும் உள்ளது. தினமும் பள்ளிக்குச் சென்று வந்த பின், அவர்கள் வீட்டின் பக்கத்திலுள்ள பூங்காவில் இருவரும் கூடி விளையாடுவார்கள். அவர்கள் இருவரும் பொம்மைகள் மற்றும் புத்தகங்களை பகிர்ந்துகொள்வார்கள். இவை அனைத்தும் ஒரு நாள் மாறியது. அவர்களது குடும்ப உறுப்பினர்கள் கொரோனா வைரஸ் மற்றும் அது ஏற்படுத்திய நோய் குறித்து பேசினர். எல்லோரும் பதற்றத்துடன் தோன்றினர். ராஜாவும் கவிதாவும் கூட நாள் முழுவதும் வீட்டுக்குள் இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். அவர்களால் பள்ளிக்குச் செல்லவோ, விளையாடுவதற்கு வெளியே செல்லவோ முடியவில்லை.

ஒரு மாலை பொழுது, உள்ளே இருப்பதால் சோர்வடைந்தபோது, மரங்களின் கிளைகளில் ஒளிந்துகொண்டு விளையாடும் பறவைகளையும் அணில்களையும் பார்ப்பதற்காக ராஜா மொட்டை மாடிக்குச் சென்றான். இப்போது காலியாக இருக்கும் பூங்காவைப் பார்த்த அவன், மிகவும் சோகமடைந்தான். அவன் கவிதாவுடன் விளையாடிய அந்த நாட்கள் மீண்டும் வராதா என்று ஏங்கினான்.





அவன் தூரத்தில் உள்ள அவளுடைய வீட்டைப் பார்த்தான், அங்கே அவள் வீட்டின் மொட்டை மாடியில் இருந்தாள்! அவன் அவளை நோக்கி கை காட்ட அவளும் திரும்பி கை காட்டினாள்.



*தினமும் மாலை வேலையில் அவர்களின் பொம்மைகளை எடுத்து கொண்டு அவர்களின் மொட்டை மாடியில் சென்று ஒருவருக்கொருவரை வாழ்த்தி, பின்னர் தங்கள் பொம்மைகளுடன் தாங்களே விளையாடுவார்கள். இது சில நாட்கள் நீடித்தது.*





ஒரு நாள், கவிதா மொட்டை மாடிக்கு வரவில்லை. சில நாட்களாகியும் அவள் வரவில்லை. ராஜாவும் கவிதாவை காணவில்லையே என்று கவலை கொண்டான். ஒரு நாள் மாலை, ராஜா அவளை மீண்டும் அவளது மொட்டை மாடியில் பார்த்தான். அவன் அவளை நோக்கி அழைத்தான், ஆனால் கவிதா நிமிர்ந்து கூட பார்க்கவில்லை. அவள் அமைதியாக உட்கார்ந்து, ஏதோவொன்றைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தாள், பின்னர் அவள் கீழே உள்ள அவளது அறைக்குச் சென்றாள்.

கவிதா ஒருபோதும் இப்படி இருந்ததில்லை. அவள் எப்போதும் கலகலப்பாகவே இருப்பாள். நிச்சயமாக ஏதோ பிரச்சனை உள்ளது! ராஜா கீழே சென்று அவன் அத்தையிடம் இதை பற்றி பேசினான். அவர் உடனே கவிதாவின் வீட்டுக்கு போன் செய்து விசாரித்தார்கள். அவர்களின் பதில் ராஜாவையும் அத்தையையும் மிகவும் துக்கத்தில் ஆக்கியது.







கவிதாவின் வீட்டிலிருந்து கொஞ்சம் தொலைவில் வாழும் கவிதாவின் மாமாவுடைய நிலைமையை பற்றி கூறி கவிதாவின் பெற்றோர் மிகவும் வருந்தினர். கவிதாவின் மாமாவுக்கு கோவிட்-19 மூலம் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. அவருக்கு நோய்த்தொற்று இருப்பதையே அவர்கள் உணரவில்லை. கொரோனா வைரஸ் தொற்றுள்ள ஏதோ ஒரு இடத்தை அவர் தொட்டிருக்கலாம், அதன் மூலம் அவரது உடலில் வைரஸ் நுழைந்திருக்கலாம்.





மற்றவர்கள் போலவே, கவிதாவின் மாமாவும் ஆரம்பத்தில் எந்த அறிகுறிகளையும் காட்டவில்லை. வைரஸ் நம் உடலில் அமைதியாக எண்ணிக்கையில் வளர்ந்த பின்னரே, அறிகுறிகள் தெரியும். அந்த நபருக்கு அதிக காய்ச்சல், வறட்டு இருமல் மற்றும் மூச்சுதிணறலும் உண்டாகக்கூடும்.




கவிதாவின் மாமாவுக்கு இருமல் மற்றும் காய்ச்சல் அறிகுறி இருந்ததால் அவர் உடனடியாக, ஒரு அறையில் தன்னை தானே தனிமைப்படுத்திக் கொண்டார். அதாவது, அவர் அவரது அறையிலேயே இருக்க வேண்டும். அவரது சொந்த குடும்ப உறுப்பினர்கள் அவரைச் சந்திக்க முடியாது. அவர் தனி தட்டில் உணவு கொள்வது, மற்றும் அவர் உபயோகித்த தட்டு, துணிகள் போன்ற பொருட்களையும் தானே கழுவினார்.



இதன் மூலம் தொற்று பரவாமல் தடுக்க முடியும். அவர் சுவாசிக்க சிரமப்படத் தொடங்கியபோதுதான் அவரது குடும்பத்தினர் அவரை ஒரு உள்ளூர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர்.





அவருக்கு கொரோனா வைரஸ் இருப்பதாக ரிப்போர்ட் காட்டியது, அவர்கள் உடனடியாக அவரது சிகிச்சையைத் தொடங்கினர். கவிதாவும் மாமாவின் குடும்பத்தினரும் அவர்களது அருகில் இருந்தவர்களும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உடனடியாக தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். அதனால் அவர்களால் எதற்கும் வெளியே செல்ல முடியாது. அவர்கள் தங்கள் வீடுகளில் தங்க வேண்டியிருந்தது, யாரையும் சந்திக்கக்கூடாது, இந்த காலகட்டத்தில் யாரையும் தங்கள் வீட்டிற்குள் அனுமதிக்கக்கூடாது. தனிமை காலம் முடிந்ததும் அவர்கள் மீண்டும் கொரோனா வைரஸ் இருக்கிறதா என்று பரிசோதிக்கப்பட்டனர். அதிர்ஷ்டவசமாக, கவிதாவின் மாமாவின் குடும்பத்திலோ அல்லது அவர்களது தொடர்புகளிலோ யாருக்கும் வைரஸ் வரவில்லை.







கவிதாவின் மாமாவும் சிகிச்சையின் பின்னர் குணமடைந்தார், அவர் மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்தார். இருப்பினும், அவர்களின் மகிழ்ச்சி குறுகிய காலத்திற்கு தான் இருந்தது. பலரும் மாமாவின் குடும்பத்திலிருந்து தங்களைத் தூர விலக்கத் தொடங்கினர்கள். அவர்களுடைய அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அவர்களைக் கண்டால் கதவுகளை மூடிவிடுவார்கள். மக்கள் அவர்களைப் பற்றி கிசுகிசுக்கிறார்கள் என்பதையும், அந்த ஏரியாவுக்கு வைரஸைக் கொண்டுவந்ததற்காக அவர்கள் குற்றம் சாட்டியதையும் அவர்கள் அறிந்தார்கள். ஒரு நாள் கவிதாவின் மாமா அவர்களின் வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு கடையில் இருந்து சில பொருட்களை வாங்க வெளியே சென்றார். பல ஆண்டுகளாக அவர் அறிந்திருந்த கடைக்காரர், பொருட்கள் தர மறுத்தது மட்டுமல்லாமல், மீண்டும் தனது கடைக்கு வர வேண்டாம் என்று கூறினார். இது மாமாவை ஆச்சர்யப் படுத்தியது.






இந்த சம்பவம் கவிதாவின் மாமாவையும் அவரது குடும்பத்தினரையும் பெரிதும் பாதித்தது. கவிதா அதைப் பற்றி அறிந்ததும், அவள் மிகவும் வருத்தப்பட்டாள். கொரோனா வைரஸ் ஏற்கனவே அனைவருக்கும் சிக்கலை ஏற்படுத்தியது, அது போதாதென்று, மக்கள் மாமாவின் குடும்பத்திற்கு எதிராக திரும்பிய விதம் அவர்களை மிகவும் காயப்படுத்தியது.



இதைக் கேட்டபின் ராஜா மிகவும் சோகமாக இருந்தான், கவிதாவின் மாமாவின் வீட்டின் அக்கம் பக்கத்திலுவர்கள் மீது கோபமடைந்தான். ராஜாவின் அத்தை அவனை அமைதிப்படுத்தி, அக்கம் பக்கத்திலுள்ள மக்களுக்கு கொரோனா வைரஸ் பற்றி தெரியாது, மற்றும் அவர்கள் பயந்துபோயிருக்கிறார்கள் என்று விளக்கினார். அதனால் தான் அவர்கள் அப்படி நடந்துகொள்கிறார்கள் என்றும் கூறினார். ராஜா கொஞ்சம் அமைதியடைந்தான், ஆனால் அவன் தன் கூட்டாளியையும் அவளுடைய குடும்ப உறுப்பினர்களையும் பற்றி இன்னும் கவலைப்படுவதாக அத்தையிடம் சொன்னான். அவரது அத்தை புன்னகைத்து, அவன் கவலைப்படத் தேவையில்லை என்றும், அவர் சரிசெய்வார் என்றும் கூறினார். அத்தை சொன்னது ராஜாவை மகிழ்ச்சியாக்கியது. ராஜாவின் அத்தை ஒரு பள்ளியின் முதல்வராக இருந்தார், மற்றும் அவரது நல்ல தொண்டு வேலையின் காரணமாக ஊரில் அறியப்பட்டார். இது ராஜாவுக்கு பெருமை தரும் விஷயாக இருந்தது.





அடுத்த நாள் அதிகாலையில், ராஜாவின் அத்தை கவிதாவின் மாமாவின் வீட்டிற்கு முகக்கவசம் அணிந்து புறப்பட்டார். கொரோனா வைரஸ் விதிகளின் காரணமாக மக்கள் தூரத்தை பராமரித்துக்கொண்டு அத்தையை பின்தொடர்ந்து கவிதாவின் மாமாவின் வீட்டினருகில் சென்றனர். அங்கு அத்தை அக்கம்பக்கத்தினருடன் பேசத் தொடங்கினார்.

பேசிக்கொண்டிருந்தபோது, ராஜாவின் அத்தை அக்கம்பக்கத்தினரிடம் "யாரும் உண்மையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட விரும்பவில்லை, என்பதை நீங்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்" என்று கூறினார். அது மட்டுமல்லாமல், கொரோனா வைரஸ் யாரையும் பாதிக்கக்கூடும் என்பதை நாம் உணர வேண்டும் என்றும் கூறினார்.







மேலும், “கொரோனா வைரஸ் உள்ள ஒருவரிடமிருந்து இந்த வைரஸ் தெரியாமல் மற்றவர்களுக்கு வரலாம். கொரோனா வைரஸ் உள்ள நபர் தும்மும்போது அல்லது எதையாவது தொடும்போது வைரஸைச் சுமக்கும் மிகச் சிறிய நீர்த்துளிகள் நகர்ந்து அருகிலுள்ள மேற்பரப்பில் விழும். மற்றவர்கள் பின்னர் அந்த மேற்பரப்பைத் தொட்டு, அவர்களின் முகம், மூக்கு அல்லது கண்களைத் தொடும்போது, வைரஸ் அவர்களின் உடலில் நுழைந்து, அவரைப் பாதிக்கிறது” என்று சொன்னார்.

ஒரு நபர் மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது, அவர் சிகிச்சையின் முடிவில் கொரோனா வைரஸுக்கு சரியாக சோதிக்கப்படுகிறார்கள். அவர்களின் உடலில் வைரஸ் இல்லாவிட்டால் மட்டுமே அவர்கள் வீட்டிற்கு செல்ல அனுமதிக்கப்படுவார்கள். இந்த கட்டத்தில் அவர்களுக்கும் நோய் இல்லாத வேறு நபருக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. எனவே, நாம் அவர்களுடன் பழகவோ அல்லது சந்திக்கவோ பயப்படக்கூடாது.

*பிறகு ராஜாவின் அத்தை "இப்படி சிகிச்சை பெற்று குணமடைந்தவர்களிடம் நாம் பாகுபாடு காட்டினால் என்ன ஆகும் என்று உங்களுக்கு தெரியுமா" என்று கேட்டார்.*

*அக்கம்பக்கத்தினர் எதுவும் சொல்லவில்லை, எனவே ராஜாவின் அத்தை பேச்சை தொடர்ந்தார்.*







*குணமடைந்த பிறகும்* பாதிக்கப்பட்டவரிடம் பாகுபாடு காட்டினால், பொது மக்கள் நோயின் அறிகுறிகளை பற்றி வெளியே சொல்ல தயங்குவார்கள். அறிகுறிகளை மறைத்து சிகிச்சை பெறமாட்டார்கள். எல்லோரும் இதைச் செய்தால், யாருக்கு நோய் இருக்கிறது என்பதை நாம் ஒருபோதும் அறிய மாட்டோம். இது அக்கம் பக்கத்தில் வைரஸை விரைவாக பரப்பிவிடும்".

*அக்கம்பக்கத்தினர் அத்தையின் பேச்சைக் கேட்டு உடன்பட்டபடி தலையை ஆட்டினார்கள். பின்னர் ராஜாவின் அத்தை தொடர்ந்து பேசினார்.*

"நமது போராட்டம் கொரோனா வைரசுடன்தான், கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுடன் அல்ல. மனிதநேயத்தை கடைபிடிப்போம். மனிதநேயம் அனைவரோடும் இருக்கவேண்டும் - எல்லா நாட்டு மக்களோடும், எல்லா இனத்தினரோடும், மற்றும் எல்லா மதத்தினரோடும். எல்லோரும் இந்த வைரஸிலிருந்து ஆபத்தை எதிர்கொள்கிறார்கள், அதனால்தான் எல்லா நாடுகளும் ஒன்றிணைந்து அதை அழிக்க ஒரு வழியைக் கண்டுபிடிக்க முயற்சிக்கின்றனர்.

ராஜாவின் அத்தை அவர்களுக்கு என்ன சொல்ல முயற்சிக்கிறார் என்பதை மக்கள் விரைவாகப் புரிந்துகொண்டனர். அவர்கள் செய்தது சரியில்லை என்று அவர்கள் உணர்ந்தார்கள். கவிதாவின் மாமாவின் பக்கத்து வீட்டுக்காரர் அழ ஆரம்பித்தார். அவர் வேதனையுடன் சொன்னார், “நாங்கள் ஒரு பெரிய தவறு செய்துள்ளோம்! நாங்கள் சிக்கலில் இருக்கும் போதெல்லாம் மாமாவும் அவரது குடும்பத்தினரும் எங்களுக்கு எப்போதும் உதவினார்கள். இப்போது, அவர்களுக்கு எங்கள் ஆதரவு மிகவும் தேவைப்பட்டபோது, நாங்கள் அவர்களை மிகவும் மோசமாக நடத்தினோம்.” அவர் மாமாவின் குடும்பத்தை நோக்கி திரும்பி, “தயவுசெய்து எங்களை மன்னியுங்கள்!” என்று கேட்டுக்கொண்டார்.

மற்ற அயலவர்களும் அவருடன் சேர்ந்து குடும்பத்தினரை மன்னிக்கச் சொன்னார்கள். அவர்கள் அனைவரும் அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்காக ராஜாவின் அத்தைக்கு நன்றி தெரிவித்தனர்.








வீட்டிற்கு வந்தபின், அதைப் பற்றி ராஜா அத்தையிடமிருந்து தெரிந்துகொண்டான். கவிதாவும் அதைப் பற்றி பெற்றோரிடமிருந்து கேள்விப்பட்டாள், பின்னர் அவர் ராஜாவுடன் தொலைபேசியில் பேசியபோது, அவள் மிகவும் உற்சாகமாக ஒலித்தாள். கவிதா ராஜாவிடம்,



“உங்கள் அத்தை மிகவும் அற்புதம்! அவர் ஒரு சூப்பர் ஸ்டார்!”

என்று சொன்னாள். பின்னர் ராஜா அதை அத்தையிடம் சொன்ன போது அத்தை சிரித்தார்.



சில நாட்களுக்குப் பிறகு, இரவு உணவிற்குப் பிறகு, எல்லோரும் ராஜாவின் வீட்டில் அரட்டை அடித்துக்கொண்டிருந்தபோது, காலிங்பெல் ஒலித்தது. இந்த நேரத்தில் அது யார் என்று அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் கதவைத் திறந்தபோது, முகக்கவசம் அணிந்த ஒரு பெண் வெளியே நின்று கொண்டிருந்ததைக் கண்டார்கள். அந்த பெண்மணி தனது முகக்கவசம் கீழே இழுத்தபோது அவர்கள் லதா அக்கா என்று ஆச்சரியப்பட்டார்கள்!



*லதா அக்கா ராஜாவின் அத்தையின் நல்ல நண்பராக இருந்தார். அருகிலுள்ள ஒரு ஊரைச் சேர்ந்த இவர், வேளச்சேரியில் உள்ள ஒரு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்தார். லதா அக்கா வேளச்சேரியில் வாடகைக்கு ஒரு அறை எடுத்திருந்தார். அவள் ஏன் இவ்வளவு தாமதமாக வெளியே வந்தாள் என்று கேட்டதற்கு லதா அக்கா சோகமாக பதிலளித்தார்,*



“நான் இன்று இரவு வழக்கம் போல் எனது வேலையில் இருந்து திரும்பி வந்தேன். இருப்பினும், வீட்டு உரிமையாளர் என் அறைக்குச் செல்வதைத் தடுத்தார். மற்றொரு நபர் என்னை எச்சரித்தார், என்னை வெளியேறச் சொன்னார். நான் அவர்களிடம் கெஞ்சினேன், இரவில் இவ்வளவு தாமதமாக எங்கு செல்லுவேன் என்று அவர்களிடம் கேட்டேன். ஆனாலும், அவர்கள் நான் சொல்வதைக் கேட்கவில்லை, அதனால் நான் உங்கள் வீட்டிற்கு வந்தேன்.”

*ராஜாவின் குடும்ப உறுப்பினர்கள் கவலைப்பட வேண்டாம் என்று அவளிடம் சொன்னார்கள். அடுத்த நாள் வீட்டு உரிமையாளருடன் பேசுவதாக ராஜாவின் அத்தை கூறினார். லதா அக்கா இரவு அவர்களுடன் தங்கினார்.*



லதா அக்கா மிகவும் கனிவான பெண்மணி. ராஜா அவர் மீது மிக அன்பாக இருந்தான், லதா அக்காவும் ராஜாவிடம் மிக அன்பாக இருந்தாள். அவள் வீட்டிற்கு வரும்போதெல்லாம், அவள் ராஜாவுக்கு நிறைய இனிப்புகளைக் கொண்டு வந்து அவனுடன் சதுரங்கம் விளையாடுவாள். ராஜா சதுரங்கம் விளையாடக் கற்றுக்கொண்டது அப்படித்தான். ராஜாவின் பிறந்தநாளின் போது, அவள் நிறைய இனிப்புகளுடன் வந்து அவனுக்காக ஒரு சிறப்புப் பாடலைப் பாடினாள். அவள் மிகவும் கவலைப்படுவதைப் பார்த்து ராஜா மிகவும் கோபமடைந்தான்.



கொரோனா தடுப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள பல மருத்துவர்கள், செவிலியர்கள், துப்புரவுத் தொழிலாளர்கள், காவல்துறை மற்றும் பிற ஹீரோக்கள்' மோசமாக நடத்தப்படுவதை ராஜா தொலைக்காட்சியில் பார்த்திருந்தான். அத்தகையவர்களுக்கு சட்டத்தின் கீழ் தண்டனை வழங்கப்படலாம் என்பதை அவன் அறிந்திருந்தான். ராஜா தனது குடும்பத்தினர் மூலம் போலீஸை அழைத்து லதா அக்காவின் வீட்டு உரிமையாளர் மீது புகார் செய்ய விரும்பினான். ராஜாவின் அத்தை அவனை அமைதிப்படுத்தி, அவன் கவலைப்படக்கூடாது, எல்லாம் சரியாகிவிடும் என்று சொன்னார்.





*அடுத்த நாள், ராஜாவின் அத்தை, லதா அக்கா மற்றும் ஒரு சிலர் தங்கள் முக கவசங்களை அணிந்துகொண்டு, லதா அக்கா வீட்டு உரிமையாளரைச் சந்திக்கச் சென்றனர். முதலில், ராஜாவின் அத்தை அவரின் இத்தகைய நடத்தைக்காக அவரை சத்தம் இட்டார். பின்னர் அவரிடம் அவர் செய்த தவறை பொறுமையாக விளக்கினார்.*







*அவர் தொடர்ந்தார்,*

“இந்த கொரோனா போராளிகளை தொந்தரவு செய்ததற்காகவும், தங்கள் கடமையைச் செய்வதிலிருந்து தடுத்ததற்காகவும் ஒருவர் சட்டத்தால் தண்டிக்கப்படலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா? லதா நேற்று இரவு காவல்துறையினரை அழைத்திருந்தால், அவர்கள் உங்களை கேள்வி கேட்க இங்கு வந்திருப்பார்கள். அவளுடைய இரக்க குணம் காரணமாக அவள் அப்படி எதுவும் செய்யவில்லை”.

*வீட்டு உரிமையாளர் தனது தவறை உணர்ந்து, அவரை மன்னிக்கும்படி ராஜாவின் அத்தையிடம் கேட்டார். மன்னிப்பு கேட்க வேண்டியது தன்னிடம் அல்ல லதாவிடம் தான் என்று அத்தை கூறினார். இதற்கு, லதா அக்கா வீட்டு உரிமையாளரிடம்,*




*இதைப் பற்றி ராஜா அறிந்ததும், அவன் மகிழ்ச்சியடைந்து, அத்தையிடம்,*



**COVID-19 தொடர்பான தகவல்களுக்கு**

இந்திய அரசின் 24x7 கட்டுப்பாட்டு அறை எண் 1075 (கட்டணமில்லாது) 011-23978046, சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தை அழைக்கவும்
மின்னஞ்சல்: ncov2019@gov.in, ncov2019@gmail.com

#TogetherAgainstCOVID19

இந்த கதை MoHFW, WHO மற்றும் UNICEF-ன் கோவிட்-19 தொடர்புடைய வழிகாட்டலின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது